OS 112/2023

பி.வா.சா.2 சம்பத் த/பெ பரசுராமன்

நாள் 15.10.2025

**குறுக்கு விசாரணை**

1. எனக்கு தமிழ் எழுத படிக்க தெரியுமா என்றால் தெரியும். முதன்மை விசாரணை வாக்குமூலத்தில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகள் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். சீத்தாம்மாளுக்கு சொத்து எவ்வாறு வந்தது என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. செட்டில்மெண்ட் ஆவணத்தை நான் படித்து பார்த்து இருக்கிறேனா என்றால் நான் படித்திருக்கிறேன். எனது முதன்மை வாக்குமூலத்தில் சீத்தாம்மாளுக்கு சொத்து எவ்வாறு வந்தது என்ற விவரத்தை சொல்லியிருக்கிறேனா என்றால் இல்லை. எனது முதன்மை வாக்குமூலத்தில் 5வது பத்தியில் சொல்லியிருக்கும் சங்கதிகள் உண்மையா என்றால் எனக்கு தெரியாது. 5வது பத்தியில் உள்ள சங்கதிகள் நான் சொல்லவில்லை. நான் சாட்சி கையொப்பம் செய்த பி.வா.சா.ஆ.2ல் எந்த சொத்து குறித்து தான பத்திரம் எழுதப்பட்டது என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. சீத்தாம்மாள் பெயரில் பட்டா ஏதேனும் பார்த்தேனா என்றால் இல்லை.

2. என்னை சாட்சியம் அளிக்க பிரதிவாதி தான் அழைத்து வந்தார் சாட்சி சொல்வதற்கு அழைப்பாணை எதுவும் வரவில்லை. சீத்தாம்மாள் அவருக்கு உரிமையில்லாத சொத்தை கொடுத்து செட்டில்மெண்ட் ஆவணத்தை பிரதிவாதிக்கு எழுதி கொடுத்துள்ளார் என்றாலும் பிரதிவாதிக்கு ஆதரவாக அதில் சாட்சி கையொப்பம் செய்து விட்டு தற்போது பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.